செ.வெ.எண் : 08/ ஜூலை நாள் : 07.07.2021

**முதலமைச்சரின் பெண்குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் தற்போது 18 வயது நிரம்பிய பெண்குழந்தைகளுக்கு முதிர்வுத்தொகை பெற அணுகலாம். மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ஜெ.யு.சந்திரகலா,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

முதலமைச்சரின் பெண்குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் கடந்த 2002-ம் ஆண்டு முதல் பதிவு செய்து தற்போது 18 வயது நிரம்பிய பெண்குழந்தைகளுக்கு முதிர்வுத் தொகை பெற வேண்டிய பயனாளிகளின் வைப்புத்தொகை இரசீது, பெண்குழந்தைகளின் மாற்றுச்சான்று, மதிப்பெண் பட்டியல், தாயார் மற்றும் குழந்தைகளின் ஆதார் நகல்கள், கடவுச்சீட்டு அளவு (Passport Size) புகைப்படங்கள் மற்றும் பயனாளிகளின் பெயரில் நடப்பில் உள்ள வங்கிக்கணக்கு புத்தகம் ஆகியவற்றுடன் சம்மந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் சமூகநல விரிவாக்க அலுவலர்கள் மற்றும் ஊர்நல அலுவலர்களை அணுகுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ஜெ.யு.சந்திரகலா,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**